# செய்திகள் - வாசிப்பவர் சற்சொரூபவதி நாதன்

## ஆழத்து முத்துக்கள் 168

- பி. விக்னேஸ்வரன் -

உலகின் அதிமூத்த வானொலிச்சேவைகளில் ஒன்று ஆசியாவின் முன்னணி வானொலி என்ற பெருமையைக்கொண்டுள்ள கொழும்பு வானொலி பின்னர் இலங்கை வானொலியாக மாறி தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக அதன் நூற்றாண்டு நிறைவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இன்னும் எட்டு ஆண்டுகளில் அதற்கு நூறு வயது. இலங்கை மக்களின் வாழ்வோடு ஒன்றித்துவிட்ட ஸ்தாபனம். குறிப்பாக, இலங்கைத் தமிழர்களுக்குத் தனித்துவமான பெருமைசேர்த்த ஒரேயொரு துறை ஒலிபரப்புத்துறை என்று சொல்லலாம். அத்தகைய பெருமைமிக்க வானொலித்துறையைக் கட்டியெழுப்பிய ஒலிபரப்பாளர்கள் முறைப்படி ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறார்களா என்றால் பதில் ஏமாற்றமாகத்தான் இருக்கும். சிங்கள, ஆங்கில ஒலிபரப்பாளர்களின் நிலையும் கிட்டத்தட்ட அப்படித்தான் என்றாலும் தமிழ் ஒலிபரப்பாளர்களுடன் ஒப்பிட்டால் அவர்களது நிலை பரவாயில்லையென்று சொல்லலாம்.

ஒலிபரப்பாளர்கள் பற்றிய உத்தியோகபூர்வமான ஆவணப்பதிவு இருப்பதாகத் தெரியவில்லை. புதிதாக ஒலிபரப்புத்துறைக்கு வருபவர்களுக்கு செவிவழியாகத்தான் இவை வந்துசேர்கின்றன. மிகச்சில ஒலிபரப்பாளர்கள் அவ்வப்போது எழுதிய புத்தகங்களில் சிலரைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவை பூரணமானதாக இல்லை. தம்பியையா தேவதாஸ், வீ.ஏ. திருஞானசுந்தரம் ஆகியோர் ஏறத்தாழ ஐம்பதுவருட ஒலிபரப்பாளர்களை ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். அவைகூட முழுமையானவையென்று சொல்லிவிட முடியாது. இந்தப்பதிவுகளை உன்னிப்பாகப் பார்த்தால் பெண் ஒலிபரப்பாளர்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பது தெரியும். அதிலும் அறிவிப்பாளர்களாகப் பிரபலம்பெற்றவர்கள் மிகச் சொற்பமானவர்களே. ஐம்பதுகளின் பிற்பகுதி அல்லது அறுபதுகளின் முற்பகுதியில் செந்தில்மணி மயில்வாகனம் என்ற ஒரேயோரு பெண் அறிவிப்பாளர் மட்டுமே பதிவில் இருக்கிறார். இந்நிலை அறுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து மாறத்தொடங்கியது. 1965ம் ஆண்டு அண்மையில் காலம்சென்ற செல்வி. சற்சொரூபவதி நாதன் பகுதிநேர அறிவிப்பாளராக அப்போதைய தேசிய சேவையில் இணைந்துகொண்டதிலிருந்து பெண் அறிவிப்பாளர்களின் வருகை படிப்படியாக ஆரம்பிக்கிறது. செந்தில்மணி மயில்வாகனம் என்ற ஒரே பெண் அறிவிப்பாளர் மட்டுமே பல பிரசித்திபெற்ற ஆண் அறிவிப்பாளர்கள் மத்தியில் செய்தி வாசித்துக்கொண்டிருந்த நிலையில் செல்வி. நாதனின் வருகை ஒரு பெரும் மாற்றத்திற்கு வித்திட்டது.

சற்சொரூபவதி நாதனின் வருகையின் பின்னர் ஆனந்தி சூரியப்பிரகாசம், புவனலோஜனி வேலுப்பிள்ளை, யோகா தில்லைநாதன், கோகிலா சிவராஜா ஆகியோர் பகுதிநேர அறிவிப்பாளர்களாகப் பணியாற்றத்தொடங்கினார்கள். இந்தப் பகுதிநேரப் பெண் அறிவிப்பாளர் பட்டியல் அறுபதுகளின் கடைசிப் பகுதியில் இராஜேஸ்வரி சண்முகம், எழுபதுகளின் தொடக்கத்தில் விசாலாட்சி ஹமீட், விமலேஸ்வரி இந்திரன், ஆமினா பேகம் என்று நீளத் தொடங்கியது. இதற்கான பாதையைத் திறந்துவைத்த சற்சொரூபவதி நாதன் இலங்கைத் தமிழ் ஒலிபரப்பு வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறார்.

1965ம் ஆண்டு தொடங்கி அண்மையில் மறையும்வரை ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்து வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் சேவையாற்றிப் புகழ்பெற்ற சற்சொரூபவதி நாதனின் ஊடகப் பங்களிப்பு மிகப்பெரியது. பல ஆண் அறிவிப்பாளர்கள் ஆதிக்கம் செலுத்திய செய்தி வாசிக்கும் துறைக்குள் புகுந்து, தனக்கெனத் தனிமுத்திரை பதித்து, மக்களின் அபிமான செய்தி வாசிப்பாளராகப் பிரசித்திபெற்றமை அவரது தனித்துவமான சாதனை. ஒலித்தெளிவு (clarity) அவரது பிரதான பலம். இந்தத் தெளிவு என்ற சொல்லுக்குள்ளேயே வாசிப்பைச் சிறப்பாக்கும் பல அம்சங்கள் அடங்கிவிடுகின்றன. எவ்வளவு தூரத்துக்கப்பால் இருந்து கேட்டாலும் எதுவுமே தப்பாது விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வாசிப்பது அவரது தனித்திறமை. சாதாரணமாக பத்து நிமிடங்களில் நூறுவரிகள் என்ற கணக்கு இவரிடம் செல்லாது. சராசரி நூற்றியிருபத்தைந்து வரிகள் இவரது வேகம். வேகத்துடன்கூடிய தெளிவே மக்கள் உற்சாகமாக இவரின் செய்தியைக் கேட்கத் தூண்டியது. அவ்வாறு செய்தி வாசிப்பதற்கு மிகுந்த சக்தி தேவைப்படும். பலவீனமான தோற்றம்கொண்ட சற்சொரூபவதி நாதன் அவர்கள் செய்தி வாசிக்கும் போது சக்திபெற்றவராக மாறிவிடுவார்.



சென்னைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப்பட்டதாரியான இவரது அறிவு சமயம், இலக்கியம் என்று பரந்து விரிந்தது. பல அரிய கட்டுரைகளை பத்திரிகைகளிலும் விசேட வெளியீடுகளிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியிருக்கிறார். இவரின் ஆங்கிலப் புலமை தமிழ் அறிவிப்பாளர்களிடையே இவரைத் தனித்துவப்படுத்தியது. நாடகம், உரைச்சித்திரம் முதலிய நிகழ்ச்சிகளில் நடித்தவர்.

இவரது ஒலிபரப்புத்துறைப் பிரவேசம் சானா அவர்களின் இலண்டன் கந்தையா நாடகத்தில் நடித்ததன் மூலமே ஆரம்பமாகியது. இவரது மேடைப்பேச்சுகளால் கவரப்பெற்ற, அப்போது தமிழ் தேசியசேவைக்குப் பொறுப்பாக இருந்த கே.எஸ். நடராஜா அவர்கள் செல்வி. நாதனை பகுதிநேர அறிவிப்பாளராக அழைத்துவந்தார். ஒலிபரப்புக்கு வெளியே பல கலை, இலக்கிய, சமய நிகழ்ச்சிகளில் பிரதான பேச்சாளராகக் கலந்துகொண்டு தனது ஆளுமையை வெளிப்படுத்தியவர். அவர் அறிவிப்பாளராகப் பணியாற்றியபோது பல உரைச்சித்திர நிகழ்ச்சிகள், மகளிருக்கான சஞ்சிகை நிகழ்ச்சிகள், பல முக்கிய நேர்காணல்கள், கல்வி நிகழ்ச்சிகள் என்று எண்ணற்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஓர் ஆளுமைமிக்க ஒலிபரப்பாளராகத் தன்மை நிலைநாட்டியவர். தமிழ் அறிவிப்பாளராகப் பணிபுரிந்தபோதும் ஆங்கில சேவையில் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகச் சில வருடங்கள் பணியாற்றியமை, தமிழ் ஒலிபரப்பாளர்களின் வரலாற்றில் ஒரு தனித்துவமான சாதனை என்று சொல்லலாம்.

அவரது செயற்பாடுகள் ஊடகத்துறைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. சமூக விடயங்களில் மிகுந்த அக்கறை காட்டியவர். தான் கல்விகற்ற யாழ். இந்துமகளிர் கல்லூரியின் பழைய மாணவர்சங்க ஸ்தாபகத் தலைவியாகத் தொடர்ந்து சேவை புரிந்தவர். சைவமங்கையர் கழகத்தின் நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டி, அதன் துணைத்தலைவராக நீண்டகாலம் சேவையாற்றியிருக்கிறார்.

இரண்டு சகோதரிகளுடனும் மூன்று சகோதரர்களுடனும் பிறந்த இவர் திருமணம் செய்துகொள்ளவில்லை. இந்தநிலை அவர் தான் புகுந்த ஊடகத்துறையுடன் ஒன்றி, அர்ப்பண சிந்தையுடன் செயலாற்றவும் அதன் உச்சங்களைத் தொடவும் உதவியது எனலாம்.

செல்வி. சற்சொரூபவதி நாதன் அவர்களுக்கு என்ன விருதுகள் உரியனவோ அத்தனையும் தாராளமாகக் கிடைத்தன எனலாம். வானொலிக்கான உண்டா விருது, கலாசார அமைச்சின் வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட எண்ணிறந்த விருதுகள். அவற்றைப் பட்டியலிட்டால் அது மிக நீண்டதாக இருக்கும். ஊடகத்துறையில் செல்வி. சற்சொரூபவதி நாதன் என்ற பெயரே போதும். அவர்பெற்ற விருதுகளைப் பட்டியலிட்டு அவரைப் பெருமைப்படுத்துவதற்கான அவசியமில்லை.

இலங்கைத் தமிழ் ஒலிபரப்புத் துறையின் உன்னத காலகட்டத்தின் சாட்சியாகப் பரிமளித்த செல்வி.சற்சொரூபவதி நாதனைப் பற்றித் தெரிந்துகொள்வதே வருங்கால ஊடகத்துறைச் சந்ததியினருக்குத் தாம் ஈடுபடும் துறையின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.



wikneswaran.p@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**